# QB365 Question Bank Software Study Material

## பொருளியல் - உணவு பாதுகாப்பு மற்றும் ஊட்டச்சத்து முக்கியமான 2 & 5 மதிப்பெண் வினாக்கள் விடைகளுடன்(புத்தக & ஆக்கபூர்வமான வினாக்கள்)

## 10ம் வகுப்பு

## சமூக அறிவியல்

மொத்த மதிப்பெண் : 50

**2 மதிப்பெண் வினாக்கள்**

15 x 2 = 30

1) FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.

**பதில் :** "எல்லா மக்களும், எல்லா நேரங்களிலும், போதுமான, பாதுகாப்பான மற்றும் சத்தான உணவுக்கான உடல், சமூக மற்றும் பொருளாதார அணுகு முறையை கொண்டிருக்கும்போது, அவர்களின் உணவுத் தேவைகளையும், சுறுசுறுப்பான மற்றும் ஆரோக்கியமான வாழ்க்கைக்கான உணவு விருப்பங்களையும் பூர்த்தி செய்வதில் உணவு பாதுகாப்பு இருக்கிறது".

2) உணவு மற்றும் ஊட்டச்சத்து பாதுகாப்பின் மூன்று அடிப்படைக் கூறுகள் யாவை?

**பதில் :** கிடைத்தல் - விரும்பிய அளவுகளில் உணவு இருப்பு
அணுகல் - முதன்மையாக வாங்கும் திறன் பற்றியது
உறிஞ்சுதல் - உட்கொள்ளும் உணவை உயிரியல் ரீதியாகப் பயன்படுத்துவதற்கான திறன்

3) பசுமைப் புரட்சியில் இந்திய உணவுக் கழகத்தின் (FCI) யின் பங்கு என்ன?

**பதில் :** 1. பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை (Minimum support Price) பருவ காலத்தில் அறிவிக்கப்படுகிறது.
2. உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை இந்திய உணவுக் கழகம் (FCI) மூலம் அரசு கொள்முதல் செய்கிறது.
3. விவசாயிகளுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட குறைந்தபட்ச ஆதரவு விலையை வழங்குகிறது.
4. வாங்கிய உணவு தானியங்களை FCI பெரிய சேமிப்பு கிடங்கினை அமைத்து சேமித்து வைக்கிறது.
5. தாங்கியிருப்பு உணவு தானியங்கள் அனைத்தையும் ஆண்டு முழுவதும் வழங்குகிறது.

4) பசுமை புரட்சியின் விளைவுகள் என்ன?

**பதில் :** 1. பசுமைப்புரட்சி நாட்டில் தோன்றி உணவு தானிய உற்பத்தியில் தன்னிறைவு பெற வழி வகுத்தது.
2. உயர் ரக விதைகளான (HYV) அரிசி மற்றும் கோதுமை ஆகிய உணவுத் தானியங்கள் பயிரிடப்பட்ட பகுதியில் உற்பத்தியை அதிகரிக்க முடிந்தது, மேலும் பிற முக்கிய தானியப் பயிர்களின் விளைச்சலும் அதிகரித்தது.
3. உணவுத் தானிய சாகுபடியின் பரப்பளவு 122 மில்லியன் ஹெக்டேராக வளர்ந்து, உற்பத்தி ஐந்து மடங்காக அதிகரித்தது.
4. உணவு தானிய உற்பத்தியில் ஏற்பட்ட இந்த மாற்றம் பால், கோழி மற்றும் மீன்வளத்துறை உற்பத்தியிலும் பலமடங்கு அதிகரிக்க காரணமாயிற்று.

5) தமிழ்நாட்டிலுள்ள சில ஊட்டச்சத்து திட்டங்களின் பெயரை எழுதுக.

**பதில் :** 1. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர் ஊட்டச்சத்து உணவுத் திட்டம்.
2. ஆரம்பக் கல்விக்கு தேசிய ஊட்டச்சத்து ஆதரவு திட்டம்.
3. பொது ICDS திட்டங்கள் மற்றும் உலகவங்கி உதவியுடன் ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள்.
4. பிரதம மந்திரி கிராமோதயா யோஜனா திட்டம்
5. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம்
6. மதிய உணவுத்திட்டம்

6) 'கப்பலுக்கு வாயில்' நிகழ்வை விளக்குக

**பதில் :** 1) இந்தியாவில் ஏற்பட்ட தொடர்ச்சியான வறட்சி, உணவு தானியங்களின் இறக்குமதியைச் சார்ந்திருக்க தள்ளப்பட்டது.
2) பணக்கார, நாடுகளிலிருந்து உணவு தானியங்களை சலுகை விலையில் இந்தியா கோர வேண்டியிருந்தது.
3) 1960களின் முற்பகுதியில் அமெரிக்கா தனது பொது சட்டம் 480 (பி.எல்.480) திட்டத்தின் மூலம் இந்தியாவிற்கு உதவி வழங்கியது.
4) இந்த நிலைமை பிரபலமாக 'கப்பலுக்கு வாயில்' இருப்பு (Ship to mouth) என்று அழைக்கப்பட்டது.

7) வறுமையின் பல பரிமாணத் தன்மை குறித்து சிறு குறிப்பு எழுதுக.

**பதில் :** 1. வறுமை என்பது ஒற்றை பரிமானமல்ல, அது பல பரிமாணத்தினைக் கொண்டது என்ற கருத்து பல பரிமாண வறுமை குறியீட்டின் அடிப்படைத் தத்துவமாகும்.

2. உடல் நலம், கல்வி, வாழ்க்கைத்தரம், வருமானம், அதிகாரமளித்தல், பணியின் தரம், மற்றும் வன்முறையிலிருந்து அச்சுறுத்தல் போன்ற ஏழை மக்களின் அனுபவத்தை இழக்கும் பல காரணிகளால் பல பரிமாண வறுமை உருவாகிறது.

8) உணவு வரையறு.

**பதில் :** மக்கள், வாழ்க்கையையும், வளர்ச்சியையும் பராமரிப்பதற்காக சாப்பிடும் மற்றும் அருந்தும் ஒவ்வொரு பொருளாகவும் உணவு வரையறுக்கப்படுகிறது.

9) தமிழ்நாட்டில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் பற்றி விளக்குக.

**பதில் :** 1) இந்தியாவில் தேசிய உணவுப் பாதுகாப்புச் சட்டம் துவங்கி மூன்று ஆண்டுகளுக்குப் பின்னர் நவம்பர் 1,2016 அன்று இச்சட்டம் இந்தியாவிலேயே கடைசி மாநிலமாக தமிழ்நாட்டில் துவங்கப்பட்டது.

2) அக்டோபர் 27 அன்று வெளியிடப்பட்ட அரசாங்க உத்திரவில், சட்டத்தை அமுல்படுத்தும்போது, அது அதன் விதிகளை மாற்றியமைக்கும் என்று அரசு குறிப்பிட்டது.

10) நுகர்வோர் கூட்டுறவு சங்கங்களின் மூன்று அடுக்குகள் யாவை?

**பதில் :** 1) முதன்மை நுகர்வோர் கூட்டுறவு சங்கங்கள்.

2) மத்திய நுகர்வோர் கூட்டுறவு கடைகள்

3) மாநில அளவிலான நுகர்வோர் கூட்டமைப்புகள்.

11) தங்கியிருப்பு பற்றி எழுதுக.

**பதில் :** 1) தங்கியிருப்பு என்பது உணவு தானியங்களான கோதுமை மற்றும் அரிசி இந்திய உணவுக் கழகத்தின் மூலம் அரசாங்கத்தால் வாங்கப்படுகிறது.

2) உபரி உற்பத்தி இருக்கும் மாநிலங்களில் விவசாயிகளிடமிருந்து கோதுமை மற்றும் அரிசியை FCIவாங்குகிறது.

3) விவசாயிகளுக்கு அவர்களின் பயிர்களுக்கு முன்பே அறிவிக்கப்பட்ட விலை வழங்கக்கப்படுகிறது.

4) இந்த விலை குறைந்தபட்ச ஆதரவு விலை என்று அழைக்கப்படுகிறது.

12) தமிழ்நாட்டில் பின்பற்றப்படும் ஏதேனும் மூன்று திட்டங்கள் யாவை?

**பதில் :** 1) பள்ளி சுகாதார அமைப்பு திட்டங்கள்

2) தசெய்ய தொழுநோய் ஒழிப்பு திட்டம்

3) முதலமைச்சரின் விரிவான சுகாதார காப்பீட்டு திட்டம்.

13) பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதனின் கருத்துப்படி ஊாட்டச்சத்து பாதுகாப்பினை விளக்குக.

**பதில் :** பிரபல விவசாய விஞ்ஞானி எம்.எஸ். சுவாமிநாதன் கருத்துப்படி "சரிவிகித உணவு, பாதுகாப்பான குடிநீர், சுற்றுச் சூழல் சுகாதாரம், ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் ஆரம்பக்கல்வி ஆகியவற்றிற்கான உடல், பொருளாதார மற்றும் சமூக அணுகல் என்பது ஊட்டச்சத்து பாதுகாப்பாகும்".

14) குறைந்தபட்ச ஆதரவு விலை என்றால் என்ன?

**பதில் :** குறைந்தபட்ச ஆதரவு விலை என்பது அந்த பயிரின் சாகுபடியில் பல்வேறு செல்வுகளை கருத்தில் கொண்டு ஒரு குறிப்பிட்ட பயிருக்கு நிபுனர் குழுவால் ஒரு விலை நிர்ணயிக்கப்படுகிறது. இதனை குறைந்தபட்ச ஆதரவு விலை என்பர்.

15) டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மை திட்டத்தினை விளக்குக.

**பதில் :** டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நன்மை திட்டத்தின் கீழ் ஏழை கர்ப்பிணிப் பெண்களுக்கு சத்தான உணவுக்கான செலவுகளைச் சமாளிக்க, பிரசவ காலத்தில் வருமான இழப்பை ஈடுசெய்ய, புதிதாகப் பிறக்கும் குழந்தைகளின் எடையை அதிகரிக்சு மற்றும் நோய்த் தடுப்பு மருந்துகளை வாங்க, அரசாங்க நிறுவனங்களில் பிறக்கும் குழந்தைகளுக்கு ரூ.12,000/- நிதி உதவியை மூன்று தவணைகளில் தமிழக அரசு வழங்குகிறது.

## 5 மதிப்பெண் வினாக்கள் 4 x 5 = 20

16) பொது விநியோக முறையை விவரிக்கவும்.

**பதில் : உலகளாவிய பொது வழங்கல் முறை:**

1. தமிழ்நாடு உலகளாவிய பொது வழங்கல் முறையை ஏற்றுக் கொண்டது. இம்முறையின் கீழ் குடும்ப வழங்கல் கார்டு பெற்றிருப்பவர்கள் அனைவருக்கும் பொது வழங்கல் முறையின் மூலம் உணவுத் தானியங்கள் மானிய விலையில் வழங்கப்படுகிறது.
2. தமிழ்நாடு அரசு உலகளாவிய பொது வழங்கல் முறையின் மூலம் அனைத்து அட்டைதாரர்களுக்கும் இலவசமாக அரிசியை வழங்குகிறது.

**இலக்கு பொது வழங்கல் முறை:**

1. இந்தியாவில் தமிழ்நாடு நீங்கலாக மற்ற மாநிலங்களில் "இலக்கு பொது வழங்கல் முறை" செயல்பாட்டில் இருந்தது.
2. இலக்கு பொது வழங்கல் முறையில் பயனாளிகள் சில அளவுகோல்களின் அடிப்படையில் அடையாளம் காணப்பட்டு அவர்களுக்கு மட்டுமே உரிமைகள் வழங்கப்படுகின்றன. மீதமுள்ளவர்களுக்கு வழங்கப்படுவது இல்லை.

**மானியம்:**

மத்திய மற்றும் மாநில அரசாங்கங்கள் பொது வழங்கல் மூலம் வழங்கப்படும் பொருட்களுக்கு மானியம் வழங்குகின்றன. மானியத்தின் நிலை மற்றும் அளவு மாநிலங்களுக்கிடையே வேறுபடுகிறது.

**தேசிய உணவு பாதுகாப்புச்சட்டம்:**

1. தேசிய உணவு பாதுகாப்புச் சட்டம் இந்திய நாடாளுமன்றத்தால் 2013இல் நிறைவேற்றப்பட்டது. இச்சட்டம் 50% நகர்புற குடும்பங்களையும் மற்றும் 75% கிராமப்புற குடும்பங்களையும் உள்ளடக்கியது ஆகும்.
2. இந்தக் குடும்பங்கள் ஒரு குறிப்பிட்ட அளவுகோலின் அடிப்படையில் அடையாளம் காளாப்பட்டு முன்னுரிமைக் குடும்பங்கள் என அழைக்கப்படுகின்றன. இந்த நாட்டின் முன்னுரிமை குடும்பங்களுக்கு தற்பொழுது பொது வழங்கல் முறை மூலம் வழங்கப்படும் உணவிளைப் பெறும் உரிமை உண்டு.
3. மத்திய அரசு அரிசியை கிலோவிற்கு Rs 3 என்ற விகிதத்திலும், கோதுமை கிலோவிற்கு Rs 2 என்ற விகிதத்திலும், தினை கிலோவிற்கு Rs 1 என்ற விகிதத்திலும் NFSA கீழ் வழங்கப்படுகிறது.

17) வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் யாவை? அவற்றை விளக்குக.

**பதில் : வாங்கும் திறனைப் பாதிக்கும் காரணிகள் :**

1. அதிக மக்கள் தொகை
2. அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்தல்
3. பொருட்களுக்கான தேவை
4. பொருட்களின் விலை நாணய மதிப்பை பாதிக்கிறது
5. பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு
6. வறுமை மற்றும் சமத்துவமின்மை

**அதிக மக்கள் தொகை:**

1. இந்தியாவில் அதிக மக்கள் தொகை வளர்ச்சி விகிதம் உள்ளது. அதிக மக்கள் தொகை அதிக தேவைக்கு வழிவகுக்கிறது. ஆனால் அளிப்பு தேவைக்கு சமமாக இல்லை.
2. எனவே சாதாரண விலை நிலை, அதிகமாக இருக்கும். இது குறிப்பாக கிராமப்புற மக்களின் வாங்கும் சக்தியை பாதிக்கிறது.

**அத்தியாவசிய பொருட்களின் விலையை அதிகரித்தல்:**

1. மொத்த உள்நாட்டு உற்பத்தியில் நிலையான வளர்ச்சியும், இந்திய பொருளாதாரத்தில் வளர்ச்சி வாய்ப்புகளும் இருந்த போதிலும், அத்தியாவசிய பொருட்களின் விலையில் நிலையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.
2. விலைகளின் தொடர்ச்சியான உயர்வு வாங்கும் சக்தியை கரண்டி, ஏழை மக்களை மோசமாக பாதிக்கிறது.

**பொருட்களுக்கான தேவை:**

1. பொருட்களுக்கான தேவை அதிகரிக்கும்போது, பொருட்களின் விலையும் அதிகரிக்கிறது. அதனால் வாங்கும் சக்தி பாதிக்கப்படுகிறது.
2. பொருட்களின் விலை நாணயமதிப்பை பாதிக்கிறது:
3. விலை அதிகரிக்கும்போது, வாங்கும் திறன் குறைந்து இறுதியாக நாணயத்தின் மதிப்பு குறைகிறது. மாறாக இது நேர்மாறானது.

**பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு:**

1. பொருட்களின் உற்பத்தி மற்றும் அளிப்பு குறையும் பொழுது, பொருட்களின் விலை அதிகரிக்கிறது.
2. ஆகையால் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

**வறுமை மற்றும் சமத்துவமின்மை:**

இந்திய பொருளாதாரத்தில் மிகப்பெரிய ஏற்றத்தாழ்வு உள்ளது. 10% இந்தியர்களுக்குச் சொந்தமான வருமானம் மற்றும் சொத்துக்களின் விகிதம் அதிகரித்து வருகிறது. இது சமுதாயத்தின் வறுமை நிலையை அதிகரிக்க வழி வகுக்கிறது. பொதுவாக வறுமையாலும் மற்றும் செல்வத்தின் சமமற்ற வழங்குதலாலும் வாங்கும் திறன் பாதிக்கப்படுகிறது.

18) புதிய வேளாண் கொள்கைக்கான முக்கிய குறிக்கோள்கள் யாவை?

**பதில் : இந்தியாவின் வேளாண் கொள்கையின் நோக்கங்கள்:**

1. உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்
2. ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை
3. ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்
4. விவசாயத்துறையை நவீனமயமாக்குதல்
5. சுற்றுச் சூழல் சீரழிவு
6. அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்

**உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை உயர்த்துதல்:**

இந்தியாவின் விவசாயக் கொள்கையின் முக்கியமான நோக்கங்களில் ஒன்று வீரியவித்து விதைகள், உரங்கள், பூச்சி கொல்லிகள், நீர்ப்பாசன திட்டங்கள் போன்ற வாங்கிய உள்ளீடுகளின் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதாகும்.

**ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டவை:**

வேளாண் கொள்கையானது பொதுவாக வேளாண்மையின் உற்பத்தித்திறனை உயர்த்துவதன் மூலமும், குறிப்பாக சிறிய மற்றும் ஓரளவு வைத்திருக்கும் உற்பத்தித்திறனை அதிகரிப்பதன் மூலமும் உடல் உற்பத்தியை உயர்த்துவதை விட ஒரு ஹெக்டேருக்கு மதிப்பு கூட்டப்பட்டதை அதிகரிப்பதாகும்.

**ஏழை விவசாயிகளின் நலன்களைப் பாதுகாத்தல்:**

ஏழை விவசாயிகளுக்கு நிறுவன கடன் ஆதரவை விரிவுபடுத்துதல், நில சீர்திருத்தங்கள் செய்தல், இடைத்தரகர்களை ஒழித்தல் போன்றவற்றின்மூலம் ஏழை மற்றும் குறு விவசாயிகளின் நலனைப் பாதுகாப்பதே விவசாயக் கொள்கையாகும்.

**விவசாயத்துறையை நவீனமயமாக்குதல்:**

விவசாயக் கொள்கை ஆதரவில் விவசாய நடவடிக்கைகளில் நவீன தொழில்நுட்பத்தை அறிமுகப்படுத்துதல் மற்றும் HYV விதைகள், உரங்கள் போன்ற மேம்பட்ட விவசாய உள்ளீடுகளைப் பயன்படுத்துதல் ஆகியவை அடங்கும்.

**சுற்றுச்சூழல் சீரழிவு:**

இந்திய விவசாயத்தின் இயற்கை அடித்தளத்தின் சுற்றுச்சூழல் சீரழிவை சரிபார்க்க இந்தியாவின் விவசாயக்கொள்கை மற்றொரு நோக்கத்தை அமைத்துள்ளது.

**அதிகாரத்துவ தடைகளை நீக்குதல்:**

விவசாயிகள் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் அய உதவி நிறுவனங்கள் மீதான அதிகாரத்துவ தடைகளை நீக்குவதற்கு இந்த கொள்கை மற்றொரு குறிக்கோளை அமைத்துள்ளது. இதனால் அவர்கள் சுதந்திரமாகச் செயல்படமுடியும்.

19) தமிழ்நாட்டின் ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்தின் நிலையை சுருக்கமாக விளக்குக.

**பதில் :** 1. மனித ஆரோக்கியத்திலும், நல்வாழ்விலும் ஊட்டச்சத்து முக்கிய பங்குவகிக்கிறது. தேசிய அளவில் அதிக பொருளாதார வளர்ச்சி இருந்த போதிலும் மக்கள் தொகையின் ஊட்டச்சத்து அளவுகள் போன்ற மனித வளர்ச்சி குறிகாட்டிகளில் மேம்பாடுகள் ஏற்றுக் கொள்ள முடியாத அளவிற்கு மெதுவாகவே உள்ளன.

2. ஏராளமான இந்தியக் குழந்தைகள் குன்றியிருக்கிறார்கள். கணிசமான எண்ணிக்கையிலான இந்தியக் குழந்தைகள் மற்றும் பெண்கள் எடை குறைவாகவும், இரத்த சோகை மற்றும் நுண்ணூட்டச்சத்து குறைபாடுகளாலும் பாதிக்கப்படுகின்றனர்.

3. இந்த பிரச்சனைகளை நீக்குவதற்காக மத்திய மாநில அரசுகள் பல்வேறு சுகாதார மற்றும் ஊட்டச்சத்து திட்டங்களான ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு சேவைகள், மதிய உணவுத் திட்டம், இனப்பெருக்க மற்றும் குழந்தைகள் சுகாதார திட்டங்கள் மற்றும் தேசிய கிராமப்புற சுகாதாரப்பணி போன்ற திட்டங்களில் கணிசமான வளங்களைக் கொண்டுள்ளன.

4. ஆறு வயதிற்குட்பட்ட குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள், பாலூட்டும் தாய்மார்கள் மற்றும் இளம் பருவப் பெண்கள் ஆகியோரின் உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து நிலைகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்களைக் கொண்டுவருவதில் தமிழகம் ஒரு முன்னோடிப் பங்கைக் கொண்டுள்ளது.

5. ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கியத்திற்கான தமிழக அரசின் அடுத்தடுத்த பட்ஜெட் செலவினங்கள் நாட்டிலேயே அதிகமாகும். ICDS திட்டம் மற்றும் புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் ஆகியவற்றின் செயல்திறன் நாட்டின் மிகச்சிறந்த ஒன்றாக கருதப்படுகின்றன.

6. ஒரு ஊட்டச்சத்து குறைபாடு இல்லாத மாநிலமாக மாற்றிட பலதுறைகள் வழிநடத்துகின்றன. "அனைத்து வகையான ஊட்டச்சத்து குறைபாட்டையும் சிறந்த செயல்திறன் கொண்ட நாடுகளின் நிலைக்கு குறைப்பது" என்பது தமிழக அரசின் குறிக்கோளாகும்.

7. தமிழ் நாட்டில் 434 குழந்தைகள் மேம்பாட்டுத் தொகுதிகள், 54,439 குழந்தை மையங்கள் (அங்கன்வாடி மையங்கள்) மூலம் ICDS செயல்படுத்தப்படுகிறது.

8. அணுகப்படாத பகுதிகளுக்கு நிலையான விரிவாக்கம், ஓரங்கட்டப்பட்ட குழுக்களின் பாதுகாப்பு, மேம்பட்ட ஒதுக்கீடுகள் மற்றும் சேவைகளின் விரிவாக்கம் ஆகியவற்றுடன், ICDS இப்போது உலகின் மிகப் பெரிய திட்டங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. மேலும் குழந்தையின் முழுமையான வளர்ச்சிக்கான ஒரு மாதிரியாகவும் விளங்குகிறது.

9. சேவைகள் நோக்கம் கொண்ட பயனாளிகளை அடைவதை உறுதி செய்வதற்காக, இந்த திட்டம் உலகமயமாக்கப்பட்டு, சுகாதாரம், கல்வி, குடிநீர் போன்றவற்றைக் கையாளும் தொடர்புடைய துறைகளுடன் ஒன்றிணைக்கப்படுகிறது.

10. புரட்சி தலைவர் எம்.ஜி.ஆர் சத்துணவு திட்டம் குழந்தைகளிடையே ஊட்டச்சத்துகுறைபாட்டை எதிர்த்து போராடுவதற்கும், தொடக்கப்பள்ளி சேர்க்கையை அதிகரிப்பதற்கும், இடைநிற்றல் விகிதங்களைக் குறைப்பதற்கும் நாட்டின் மிகப்பெரிய மதிய உணவுத் திட்டமாகக் கருதப்படுகிறது.

11. நாட்டின் பிற மாநிலங்கள் தமிழகத்தின் முன்னோடி முயற்சிகளின்படி பதிய உணவு திட்டங்களை வடிவமைத்துள்ளன.